மணிச்சுடர் 25/26.09.2013



## சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் நடத்திய

# "சட்டமும் நீங்களும்" இலவச கருத்தரங்கு

சிங்கப்பூர், செப். 25–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) ஏற்பாட்டில், சென்ற ஞாயிற்றுக்கிழமை 22–09–2013 அன்று, காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை, தமிழ் மொழியில் "சட்டமும் நீங்களும்" இலவச கருத்தரங்கு, சிங்கப்பூரில் வில்கி சாலையில் அமைந்துள்ள கப்லன் உயர் கல்வி நிலையத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சிங்கப்பூர் கலைப்பித்தர்கள் கழகத்தின் தலைவரும் வழக்கறிஞருமான நாவரசர் ஆர். கலாமோகன் இக்கருத் தரங்கை நடத்தினார்.

முதலாளி– தொழிலாளி உறவு, வர்த்தக முறைகள், சாலை விபத்து, வேலையிட விபத்து, கடன் விதிமுறைகள், உத்தர வாதக் கையெழுத்து உள்ளிட்ட பல்வேறு சட்டங்களை விளக்கினார். கேள்வி பதில் அங்கமும் இடம் பெற்றது.

சங்கத்தின் செயலாளர் அப்துல் சுபஹான், வழக்கறிஞர் கலாமோகனுக்கு பொன்னாடைப் போர்த்தி கௌரவித்தார். துணைச்செயலாளர் அப்துல் நஜீர், துணைப் பொருளாளர் அப்துல் மாலிக் நினைவுப்பரிசுகளை வழங்கினர்.

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் அமைப்பின் பொதுச் செயலாளரும், சிங்கப்பூர் தமிழர் பேரவையின் துணைத்தலைவருமான சமூக சேவகர் தமிழாசிரியர் ஹாஜி மு. அ. மசூது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினருக்கு, சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ஹாஜா சேக் அலாவுதீன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும் பிரபல எழுத்தாளருமான ஷாநவாஸ் அப்துல் காதர் இக்கருத்தரங்கை வழிநடத்தினார். சிங்கப்பூரில் பணிபுரியும் ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் மாணவர்களும், சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களும், பொதுமக்களும், வெளிநாட்டுத் திறனாளர்களும், ஊழியர்களும் இக்கருத்தரங்கில் கலந்து பயன் பெற்றனர்.

1951 ஆம் ஆண்டு திருச்சியில் நிறுவப்பட்ட ஜமால் முஹம்மது கல்லூரி கடந்த 62 ஆண்டுகளாக உயர்கல்விச் சேவைகளை வழங்கி பல்வேறு சாதனைகளை புரிந்து வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

செய்தி: முனைவர் முஹிய்யத் தீன் அப்துல் காதர்

தலைவர், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம், சிங்கப்பூர்